சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.24.04.2026.
OS.No.358/2018
DW4 : கிருஷ்ணமூர்த்தி (வயது 47 ) த/பெ.பஞ்சநதம்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கு விவரம் கூறியது பிரதிவாதி மகாலிங்கம் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி கையொப்பம் செய்ய சொன்னதின்பேரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். வழக்கை தாக்கல் செய்தவர் யார் என்றால் ரவிகுமார். ரவிகுமார் தான் மகாலிங்கத்திற்கு எதிராக வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை.

யார் மகாலிங்கத்திற்கு எதிராக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் விவேக். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் செக் பவுன்ஸ்க்காக கேஸ் போட்டுள்ளார். இந்த வழக்கின் வாதிக்கும் மகாலிங்கத்திற்கும் எந்த சொத்து சம்மந்தமாக கிரய உடன்படிக்கை ஆவணம் ஏற்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த சொத்து என்றால் வீடு. அந்த வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

கிரய உடன்படிக்கை ஆவணம் 2012 ஆம் வருடம் ஏற்பட்டது. மாதம், தேதி தெரியாது. மேற்படி கிரய உடன்படிக்கை ஆவணத்தை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். சாட்சி கையெழுத்து நான் தான் போட்டேன். மேற்படி ஆவணத்தில் 2 வதாக சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். முதல் சாட்சியாக ஆறுமுகம் கையொப்பம் செய்துள்ளார். ஆவணத்தில் எந்த பக்கத்தில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை.

இந்த வழக்கை பற்றிய முழு விவரமும் எனக்கு தெரியாது என்றும் அதனால் தான் வழக்கின் வாதி பெயர் கூட எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. மகாலிங்கம் எனக்கு நண்பர். எத்தனை வருட பழக்கம் என்றால் 25 வருட பழக்கம்.

மகாலிங்கம் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதாலும் எனக்கு 25 வருட பழக்கமானவர் என்பதாலும் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றும்,நான் படித்து பார்த்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ signed/
கிருஷ்ணமூர்த்தி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA

Digitally signed by R.MOHANA
Date: 2026.04.24 18:13:31 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி